# IN THE COURT OF THE DISTRICT MUNSIF,
## Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),
## District Munsif, Arni.
## O.S.210/2013

2026—ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 3ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3—ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**Deposition of Witness for** **PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | ° | சேட்டு | தொழில் | ° | மண்டல துணை வட்டாட்சியர், மேற்கு ஆரணி |
| தந்தை பெயர் | ° | சுப்பிரமணி | வயது | ° | 45 |
| கிராமம் | ° | காந்தபாளையம் | | ° | |
| தாலுக்கா | ° | கலசபாக்கம் | | ° | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.02.2026.** **நேரம் - 12.35**

சாட்சியின் அடையாளம் - பணி அடையாள அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ம் தரப்பினர் ஆவேன். நான் மேற்படி கிராமத்தில் வசித்து மண்டல துணை வட்டாட்சியராக, மேற்கு ஆரணியில் பணி புரிந்து வருகிறேன். ஆரணி வட்டம், முள்ளிப்பட்டு கிராமத்தில் பட்டா எண்.666 சர்வே எண்.129/3பி சுப்பிரமணி குமாரர் சிவக்குமார் என்பவர் பெயரில் உள்ளது. ஆரணி வட்டம், முள்ளிப்பட்டு கிராமத்தில் பட்டா எண்.675 சர்வே எண்.129/3ஏ2 சிவக்குமார் மனைவி சுதா என்பவர் பெயரில் உள்ளது. மேற்படி 2 ஆவணங்கள் சம்மந்தமாக எனது அலுவலகத்தில் மேற்படி நபர்கள் பெயரில் வழங்கப்பட்ட சிட்டா வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ 7 ஆகும்.

2. பட்டா எண். 666 மற்றும் 675 ஆகிய இரண்டிற்கும் சிவக்குமார் என்பவர் தீர்வை செலுத்தியதற்கான ரசீது வா.சா.ஆ.3 ஆகும். பட்டா எண்.660க்கு சிவக்குமார் என்பவர் தீர்வை செலுத்தியதற்கான ரசீது வா.சா.ஆ.4 ஆகும். வா.சா.ஆ.4 ஆவணத்தின் உண்மை தன்மையை என்னால் சொல்ல இயலாது, ஏனென்றால் அது நகலாகும். மேற்படி வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 ஆகியவை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதற்கு துணை

வட்டாட்சியர் கையொப்பமிட்டார், ஆனால் மேற்படி தீர்வை ரசீது நகலாக உள்ளதால் என்னால் சொல்ல இயலாது.

3. 12.08.2009 அன்று சிவக்குமார் என்பவருக்கு தலைமையிடத்து துணை வட்டாட்சியர், ஆரணி மேலெழுத்து செய்து கொடுத்த ஆவணம் வா.சா.ஆ.10 ஆகும். மேற்படி ஆவணத்தில் உள்ள சர்வே எண். 129/3ஏ, 129/3பி உள்ள நிலம் புஞ்சை நிலமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி சர்வே எண்கள் 129/3ஏ2 மற்றும் 129/3பி, ராமலிங்கம் பெயரில் இருந்து ராஜேந்திரன் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது, மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.13 ஆகும், மேற்படி பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான செயல்முறை உத்தரவு தற்போது என்னிடம் இல்லை.

4. சர்வே எண். 129/3ஏ2 என்பது 129/3ஏ2பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. சர்வே எண்.129/3பி என்பது 129/3பி2, 129/3பி3, 129/3பி4, 129/3பி5, 129/3பி6, 129/3பி7 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. ஆறு மனைகளுக்கு நீளம், அகலம் தனி தனியாக குறிப்பிடாமல் உள்ள நிலையில் எதன் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. பொதுவாக ஒரு மனை ஒருவர் பெயரில் இருந்து மற்றவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய வேண்டுமென்றால் மனையின் நீளம், அகலம் மற்றும் ஜக்பந்தி அனைத்தும் சரி பார்த்துதான் பட்டா பெயர் மாற்றம் செய்ய இயலும்.

5. ஆறு மனைகளின் நீளம், அகலம் ஒரே அளவாக குறிப்பிட்டு பெயர் மாற்றம் செய்யும் போது ஒரே உட்பிரிவுதான் செய்ய முடியும், ஆனால் சர்வே எண்.129/3பி என்பது 6 உட்பிரிவுகள் செய்யப்பட்டுள்ளது, எதன் அடிப்படையில் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அவ்வாறு ஒவ்வொரு மனையின் நீளம், அகலம் சரியாக குறிப்பிடாத போது உட்பிரிவு செய்ய இயலுமா என்றால் இயலாது. இன்றைய தேதி வரை வருவாய் துறை ஆவணங்களில் மேற்படி சர்வே எண்கள் புஞ்சை நிலமாகதான் வரையறுக்கப்பட்டுள்ளது. பொதுவாக மனை பிரிவுகளாக இருந்தால் தீர்வை வசூல் செய்ய இயலாது, புஞ்சை நிலத்திற்கு மட்டும்தான் தீர்வை வசூல் செய்ய இயலும்.

6. இந்நாள் வரை மேற்படி சர்வே எண்களின் நிலத்திற்கு தீர்வை வசூல் செய்து வருகிறோம். ஒரு புஞ்சை நிலம் மனை பிரிவுகளாக மாற அங்கீகாரம் வழங்கப்பட்டால்தான் அவை மனைகளாக மாற்ற இயலும். அவ்வாறு மனை பிரிவுகள் செய்ய அங்கீகாரம்

செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை பற்றி எனக்கு தெரியாது. மனைப்பிரிவுகளுக்கு உரிய அங்கீகாரம் வழங்காதபட்சத்தில் பட்டா மாற்றம் செய்ய இயலாது. அவ்வாறு மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் பெற்றிருந்தால் அந்த அங்கீகாரத்தை குறிப்பிட்டுதான் பட்டா பெயர் செய்ய மாட்டோம்.

7. பட்டா எண்.9482 ன் படி வெங்கடேசன் மகன் மீனாட்சி சுந்தரம் என்பவர் பெயரில் உள்ளது. ஏற்கனவே ராஜேந்திரன் என்பவர் பெயரில் உள்ள பட்டாவைதான் மீனாட்சி சுந்தரம் கிரையம் பெற்று அதன் பேரில் மீனாட்சி சுந்தரம் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது, அதன் பிறகு எங்கள் அலுவலகத்தில் இருந்து வழங்கப்பட்ட பி.வா.சா.ஆ15 சிட்டா ஆகும். மேற்படி ஆவணங்கள் புஞ்சை நிலமாகதான் உள்ளது. பி.வா.சா.ஆ.6ல் சர்வே எண்.129/3ஏ2 மற்றும் 129/3பி உள்ள இடத்தில் மனைகள் 15 முதல் 20 மனைகளாக எழுதப்பட்டுள்ளது, ஆனால் உட்பிரிவு செய்யும் போது 7 மனைகள் உட்பிரிவு செய்யப்பட்டதாக பட்டா வழங்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை முடிவடைந்தது.**

**குறுக்கு விசாரணை**

பி.வா.சா.ஆ.6ல் உள்ள சொத்து விவரத்தில் மனைகளாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனைப்பிரிவுகள் அங்கீகாரம் பெற்று பிரிக்க எங்கள் துறை சார்ந்த வேலை இல்லை என்றால் சரிதான். கிராம பஞ்சாயத்து தலைவர்தான் மனைப்பிரிவுகளுக்கு அங்கீகாரம் வழங்குவார் என்றால் சரிதான். மனைப்பிரிவுகளாக ஏற்கனவே பிரிக்கப்பட்டிருந்தால்தான் மனை எண்கள் போட்டு ஆவணம் தயார் செய்ய முடியும் என்றால் சரிதான். சர்வேயர் உட்பிரிவு செய்யும் போது பத்திரம் மற்றும் அங்கீகாரத்தை பார்த்த பின்புதான் மனைகள் பிரிக்கப்படும் என்றால் சரிதான்.

2. புஞ்சை நிலங்களை மனைகளாக பிரித்தாலும் அதன் தன்மை புஞ்சை நிலமாகதான் வரும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் அடங்கலில் சர்வே எண்.129/2 முதல் 129/8 ஆகியவை வீட்டு மனைகள் என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அடங்கல் எந்த வருடத்தில் வழங்கப்பட்டது என்றால் 2018, 2019 வருடமாகும். அடங்கல் உண்மை நகல் 1427 பசலி வருடத்தில் மனையாக உள்ளது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.20** ஆகும். (3 தாள்கள்). அடங்கல் உண்மை நகல் 1426 பசலி வருடத்தில் மனையாக உள்ளது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.21** ஆகும்.(3 தாள்கள்). அடங்கல் உண்மை நகல் 1425 பசலி வருடம் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி நபர்கள் மேற்படி சர்வே எண்களில் மனை பிரிவுகளுக்கு வாங்கிய அங்கீகாரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களுக்கு மனை பிரிவு அங்கீகாரம் வாங்கியுள்ளார்கள் என்றால் அதைப் பற்றி என்னால் சொல்ல இயலாது.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

நேரம்- 1.30

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni